சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

மனு எண். எம்.சி.ஓ.பி. 156/2016

RW - 1

2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 03 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | தண்டபாணி |
| க.பெ. (அ) த.பெ. | வேலுச்சாமி |
| வயது | 64 |
| முகவரி | கூளநாயக்கன்பட்டி |

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது நகல் **எமசாஆ 1** ஆக குறியீடு செய்யப்பட்டது. நான் இவ்வழக்கில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி எதிர்வாதம் தாக்கல் செய்து பின்னிட்டு வழக்கு நடத்த முன்வராததால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் எதிருரையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எதிரே வந்த பைக் ஓட்டுநர் தான் விபதத்திற்கு காரணம் என எதிருரையில் சொல்லியுள்ளேன். விபத்து 04.04.2016 ம் தேதி நடந்தது. அன்று காலை 8.00 மணிக்கு கூளநாயக்கன்பட்டியில் உள்ள என் வீட்டில் இருந்து அய்யம்பாளையம் ஸ்சர்ச் முன்பாக பைக்கில் சென்றுகொண்டிருந்தேன். அப்போது எதிரே பைக் நேராக வந்து

ஓவர் டேக் செய்து என் மீது மோதிவிட்டது. நான் ரோட்டிற்கு வடபுறமாகவும், பைக்கில் வந்தவர்கள் தென்புறமாகவும் விழுந்து பைக்கில் வந்தவர்கள் லாரியில் விழுந்துவிட்டார்கள். எனக்கு மயக்கமாகி விட்டதால் பிறகு பைக்கில் வந்து அடிப்பட்டவர்கள் இறந்துவிட்டதாக பிறகு கேள்விபட்டேன். லாரியில் விழுந்து பைக்கில் வந்தவர்கள் இறந்ததாகத்தான் எனக்கு சொன்னார்கள். எனக்கு தான் பெரிய காயம்ஏற்பட்டது. பைக்கில் எதிரே வந்தவர்களுக்கு பெரியகாயம் ஏற்படவில்லை. லாரியில் மோதியதால்தான் பைக்கில் வந்தவர்களுக்கு இறப்பு ஏற்பட்டது. நான் இருசக்கர வாகனத்தை கவனமாக, மெதுவாகத்தான் ஓட்டி சென்றேன். நான் மயக்கமாகி மருத்துவமனை சென்றதால் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் என் தவறால் விபத்து ஏற்பட்டதாக பைக்கில் வந்தவர்கள் புகார் அளித்துவிட்டார்கள். குற்றவியல் நீதிமன்றத்தில் என் மீது குற்றம் இல்லை என விடுதலை செய்யப்பட்டேன். விபத்திற்கு நான் பொறுப்பல்ல என்பதால் நானோ எனது காப்பீட்டு நிறுவனமோ நஷ்ட ஈடு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கூளநாயக்கன்பட்டியிலிருந்து நான் பாலக்காடு ரோட்டில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது பின் புறமாக என் மனைவி மகாலட்சுமி அமர்ந்து வந்தார் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் பேசிக்கொண்டே மேற்கிருந்து கிழக்கு நோக்கி ஓட்டி சென்றேன் என்றால் நாங்கள் பேசாமல்தான் சென்றோம்.

அய்யம்பாளையம் ஸ்சர்ச் அருகே சென்றபோது என் மனைவியுடன் பேசிக்கொண்டே வேகமாக சென்றதால்தான் எதிரே வந்த இருசக்கரவாகனத்தில் நான் மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல, விபத்திற்கு என்னுடைய அதிவேகமும், கவனக்குறைவும் தான் காரணம் என்றால் சரியல்ல. பாலக்காடு ரோடு இரு மாநிலங்களுக்கிடையே உள்ள தேசிய நெடுஞ்சாலை என்றாலும், போக்குவரத்து அதிகம் உள்ள சாலை என்றால் விபத்து சமயம் போக்குவரத்து அதிகம் இல்லை. நான் கவனக்குறைவாக நீளமாக லாரியை அதிவேகமாக முந்திசென்று எதிரே ரோட்டின் ஓரமாக வந்துகொண்டிருந்த இருசக்கரவாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல., நான்தான் கவனக்குறைவாக லாரியை முந்த முயன்று விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றாலும் எதிரே வந்த கருப்புசாமி எந்த வாகனத்தையும் முந்த முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரே வந்த இருசக்கர வாகனத்தின் இடதுபுறம் முழுவதும் சேதமுற்றதாகத்தான் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் நான் வலதுபுறமாக இருசக்கர வாகனத்தில் மோதியதால் தான் இருசக்கர வாகனம் வலதுபுறமாக விழுந்து முழுவதும் சேதமடைந்துவிட்டது என்றால் சரியல்ல. நான் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்றபோது விபத்து எனக்கு வலதுபுறமாக நடந்ததாதகத்தான் மாதிரிவரைபடத்தில் போலிசார் குறிப்பிடுள்ளார்கள் என்றாலும் என்மீது தவறு இருந்ததால்தான் போலிசார் முதல் தகவல் அறிக்கை என் மீது பதிவு செய்து குற்ற நடவடிக்கை மேற்கொண்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல்

செய்யப்பட்டது என்றால் சரியல்ல. களன் மீது தவறு இல்லை என குற்றவியல் நீதிமன்றத்தில் நான் தனி நபர் புகார் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் தனி நபர் புகார் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அதிவேகம், கவனக்குறைவு ஆகியவைகளால்தான் எதிரே வந்தவர்கள் இறந்துள்ளார்கள் என்றாலும் அதனால் நானும் எனது காப்பீட்டு நிறுவனமும் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. இழப்பீடு கொடுப்பதில் இருந்து தப்பிக்க வேண்டி எனது காப்பீடு நிறுவனம் கேட்டதன் அடிப்படையில் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குற்றவியல் நீதிமன்ற தீர்ப்புரையை தாக்கல் செய்யதாத நிலையில் நான் விடுதலை செய்யப்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி